## தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் - 2017

-----------------------------------------------------------------------------------------

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரித்தாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 நிதியத்தின் தொடர்நிதியங்கும் தன்மை

அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் நிதியத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு 2017 திசெம்பர் 19 ஆந் திகதிய PFD/SOP/WMCA/001/FD/03 ஆம் இலக்க கடிதத்தில் அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் கட்டளையிட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் ரூபா 500,000 பெறுமதியான நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 869,916 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,996,766 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,126,850 தொகையான வீழ்ச்சியொன்று இடம்பெற்றிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினை தாபித்ததன் பிரதான நோக்கம் யுத்த சூழ்நிலைகள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களினால் தமது பெற்றோர்களையோ பாதுகாவலர்களையோ இழந்த பிள்ளைகள் உட்பட பொருளாதர பிரச்சினைகளால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தேர்ச்சிகள் மற்றும் ஏனைய திறமைகள் என்பவற்றை அதிகரித்துக் கொள்ள முடியாத இலங்கை குழந்தைகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதாகும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 சனவரி 02 ஆந் திகதிய அப/13/1436/528/008/-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கொடி விற்பனையிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிதியினைப் பயன்படுத்தி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆக்கபூர்வமான வகையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் உலக சிறுவர் தினத்தினையொட்டி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் 400,000 கொடி அச்சிடப்பட்டு கொடியொன்று ரூபா 10 வீதம் விற்பனை செய்வதற்கு நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டில் கொடி விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 332,416 தொகை மற்றும் நிலையான வைப்புக்கள் முதலீட்டின் மூலம் பெற்றுக்கொண்ட ரூபா 869,916 தொகையான வருமானத்தையும் உள்ளடக்கி மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 5,618,262 தொகையை சிறுவர்களுக்கு நன்கொடை கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் எவ்வித மானிய தொகையும் உரிய தரப்பினருக்கு கொடுப்பனவு செய்வதற்கு தவறியிருந்தது.

(ஆ) தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நிதியத்தை நிர்வகித்தல் அனைத்து அமைச்சு கண்காணிப்புக் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை அக்குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் வரை அக்குழு ஒரு தடவையாவது கூட்டப்பட்டிருக்கவில்லை.